437

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
3 - AUG 1912
MADRAS

உ

திருச்சிற்றம்பலம்

# திருக்குவளை

## ஸ்ரீ தியாகராஜசுவாமியுலா

இஃது

ஆலங்காடு மகாமாக்ஷிமைதங்கிய ஸ்ரீமான்

ரா. ம. சிதம்பரஞ்செட்டியாரவர்கள்

மாணாக்கருளொருவரும்

மன்னார்குடி நாஷனல் ஹைஸ்கூல் தமிழ்பண்டிதருமாகிய

தி. குப்புஸாமியையராற்

பரிசோதிக்கப் பெற்றுப்

பல அன்பர்களுடைய விருப்பத்தின்படி

பதிப்பிக்கப் பெற்றது.

*Printed at the* "Bharati Press,"

*Mannargudi.*

பரிதாபி௵ ஆடி மீ ௫உ

[20—7—1912]

O-,14M,T
N12

85600

உ

திருச்சிற்றம்பலம்

# திருக்குவளை

## ஸ்ரீ தியாகராஜசுவாமியுலா

இஃது

ஆலங்காடு மகாமாக்ஷிமைதங்கிய ஸ்ரீமாந்

ரா. ம. சிதம்பரஞ்செட்டியாரவர்கள்

மாணாக்கருளொருவரும்

மன்னார்குடி நாஷனல் ஹைஸ்க்கூல் தமிழ்ப்பண்டிதருமாகிய

தி. குப்புஸாமியையராற்

பரிசோதிக்கப் பெற்றுப்

பல அன்பர்களுடைய விருப்பத்தின்படி

பதிப்பிக்கப் பெற்றது.

*Printed at the* "Bharati Press,"

*Mannargudi.*

பரீதாபிஷூ ஆடிமீ ௫௨

[20—7—1912]

1457
894.8117

உ

சிவமயம்

# சிறப்புப்பாயிரம்

ஆலங்காடி மகாமகிமைதங்கிய ஸ்ரீமாந்

**சிதம்பர செட்டியாரவர்கள்**

மாணாக்கரும்

இராமநாதபுரம் ஸமஸ்தானவித்துவானும்

மன்னார்குடி பிண்டிலே காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய

**மகா-ள-ள-ஸ்ரீ சர்க்கரை இராமசாமிப் புலவரவர்கள்**

இயற்றியது

வண்டிசைக்குத் தேன்பரிசில் வழங்கியெழு பரிவேடை மாற்றி யோங்குந்
தண்டலைசூழ் திருக்குவளை தனிலுறையுங் கோளிலிநா தன்பா லன்பு
கொண்டுமுன்னோர் கண்டிதெனச் கூறுமுலா நூலையச்சிற் றுலவச்செய்தான்
தண்டமிழோர் தருதப்புச் சாமியெனு நான்மறையோர் தலைவன்றனே

07/4M,T
N12
85600

உ

OF THE REGISTRAR
REGISTERED

சிவமயம்

# திருக்குவளை ஸ்ரீ தியாகராஜஸ்வாமி யுலா.

## விநாயகர் துதி

### வெண்பா

கோளிலியப்பர் குணமூன் றுடையார்தந்
தோளி லுலாமாலை சூட்டுதற்கு—வாளவுணன்
கற்பக வேறொட்ட கடவுட்கு முன்வந்த
கற்பகத்தின் பொற்கழல்கள் காப்பு

பூமேவு செஞ்சடையான் பூமேவு வேதாவும்
பூமேவு மாலும் புரந்தரனும்—பூமேவு

மாலைபுனை விண்ணவரு மாதவரும் போற்றிசெயுஞ் 1
சூல்தர நீலகண்டன் றோகைபங்கன்—பாலவிழி

யங்கியான் வாமவிழி யந்திமதி யாவலக்கண்
பொங்குகதி ராகப் புனைந்தருள்வோ—னெங்கு

மருவா யுருவாகி யண்டபகிரண்டத்
துருவாய்ச் சுருதிபுகழ்ச் சொல்லாய்த்—தருவாய்மை

யொன்றாய்ப் பலவாகி யோமென்னு மோரெழுத்தாய்க்
குன்றாத ஞானக் கொழுந்தாகி—யென்றும்

பலகோடி யண்டம் படைத்தளித்து நீக்கி 5
யுலகே ழுடையா னொருவன்—மலரோனோ

டஞ்சக் கரத்தா னனுதினமும் போற்றிசெயு
மஞ்சக் கரத்தா னருளுடையோன்—னஞ்சுநுகர்

சங்கரன்பொன் மேனியினன் சாற்றுந் தமிழ்ப்புலவன்
கிங்கரன்பொன் மேரு கிரிவளைத்தோன்—மங்களமாய்க்

## ஸ்ரீ தியாகராஜஸ்வாமியுலா

கோளிலிவாழ் வேதக் கொழுந்தாகிச் செங்கமலத்
தாளரியுந் தேடுந் தனித்தலைமை ஞாளமுறும்

பங்கயத்தில் வேதன் படைக்குந் தொழில்பெறற்குச்
சங்கரனைப் பூசைசெயத் தக்கதென்று—வங்கணமாய்

வாசமுறு புட்ப வனமேவிச் சந்த்ரநதி
வீசுந் திரைகொழிக்கும் வெண்மணலை—நேசமுட

னேர்க்கும் பரம விலிங்கமா கப்பிடித்துச்
சீர்க்கொன்றை வேணியனைத் த்யானித்துப்—பார்க்குஞ்

சிவபூசை கற்பமெலாஞ் செய்தபின் வேதா
நவபூசை கண்டிரங்கு நாதன்—தவவிரிஞ்சன்

கண்டு களிகூரக் காட்சி கொடுத்ததற்பின்
முண்டகத்து வேதா முகமலர்ந்தே—யண்டர்பிரான்

கோயில் வகுத்ததுக் குளிர்திருவீ ழாநடத்தி
நாயகன்பேர் ப்ரமபுரி நாதனென்றுந்—தூய

பிரமபுர மென்றுபதிப் பேர்கொடுத்தும் வேதா
வரமுதவு தீர்த்தம் வகுக்கத்—திரமான

நீற்றூல் விளங்கு நிமலன் பதியைமுன்பு
தேற்றூ வனமென்று செப்புவார்—போற்றுகம

லத்தனுக்கு ஞான மருளியளிக் குந்தொழிலிற்
சித்தந் தெளிவுவரச் செய்ததனுன்—முத்தர்திருப்

பேர்கோ ளிலியென்பார் பேருலகம் போற்றிசெயுந்
தார்கோடி சேர்மௌலீச் சங்கரன்ற—ஞேர்பாகங்

கொண்டமருஞ் சங்கரிக்குக் கூறுந் திருநாமம்
வண்டமரும் பூங்குழலி மானென்பா—ரண்டருக்கா

முன்பு சுகாய முசுகுந்தன் செய்யவிந்த்ர
னின்ப முறுவாங்கே யென்றுரைப்ப—வன்புடனே

யாழி த்திருமா லளித்தசெல்வத் த்யாகரென்னு
மூழிப் பரனை யுதவுகென்ன—வாழியா

யன்று மகவா னருமைப் பெருமானை
மன்றன் மலர்க்கையான் மகிழ்ந்தளிப்ப—வென்றிமன்ன

னேழு விடங்க ரினுங்கா விரிநாட்டில்
வாழ்வு பெறுசிவனை வைத்ததனில்—வேள்வி

யவனி விடங்கனுமா யண்டரெலாம் போற்றுஞ்
சிவனிவடத் தேயிருக்கச் செய்து—நவமணியிற்

செம்பொனாற் செய்த திருக்கோ யிலுமதிலுஞ்
செம்பதும ராகத் திருத்தேரு—மம்புவியுர்

த்யாகப் பெருமான் றிருப்பூசைக் கீயவருண்
ணாகத் திருக்கோ ளிலிநாதன்—யோகமுள்ள

பாண்டவர்க ளைவருந்தம் பாரா ளரசிகந்து
தாண்டிபுக ழேகசக்ரநக—ரீண்டிவரு

மைய மெடுத்துண்ண வதனி னரபலிகொள்
கையன் பகாசூர னைவீமன்—கையினாற்

கொல்ல வவனுருவங் கொள்பிரம கத்தியெனுந்
தொல்லைப பெரும்பாவஞ் சூழ்ந்துகொள்ள—நல்லுலகி

லிப்பாவந் தீர்த்திடுவா னெம்பெருமான் கோளியா
னப்பார் சடைமுடியா னூமென்று—தப்பாம

லிந்து நதிமூழ்கி யெம்பெருமா னைப்புகழ்ந்து
குந்திமக்க ளைவர்களுங் கோயில்புக—விக்கைதப்

## ஸ்ரீ தியாகராஜஸ்வாமியுலா

பிரமகத்தி நீக்கும் பிறைசூடி சூலக்
கரமிருத்த செய்யநுதற் கண்ணன்—பரவைக்குச்

சுந்தரனார் சேர்முன்பு தூது நடந்துமவன்
பைந்தமிழ்க்கு ச்செம்பொன் பரிசளித்து—நொந்தபசிக்

கண்டர்புகழ் குடையூ ராளுமொரு வேளாளன்
கொண்டலெனுங் காராளர் கோத்திரத்தான்—றண்டமிழ்க்குச்

செஞ்சாலி நெல்லுத் திரளளப்பச் சுந்தரனு
மஞ்சாமற் கோயில்வல மாகவந்து—தஞ்சமுநீ

யாளிலிகா ணெம்பெருமா னட்டித் தரப்பணிசெய்
கோளிலியா யென்றுதமிழ்க் கூறுதலும்—வான்பரித்த

கண்கோடி பூத கணங்கணெல்லைக் குண்டையூர்
மண்கூட வாரி மகிழ்ந்தெடுத்துப்—பெண்பெருமா

ளாரூர்ப் பரவை யணிமனையெல் லாநிறைத்த
பேரூர்ப் பிரம புரிப்பெருமான்—காரூருங்

கண்டத்தா னன்புசெய்யார் காணாதா னண்டபகி
ரண்டத்தா னஞ்செழுத்தா னாறணிந்தோன்—பண்டயன்செய்

ஞாலமுண்ட சூலதர னாயறுகு சூடினோன்
சீலமுண்ட திங்கள்புனை செஞ்சடையா—ஞாலமுண்ட

செவ்வாயா னற்புதன்மேற் சேரும் வியாளந்தான்
மெய்வாய்த்த வீமேலை வெள்ளியான்—பொய்வா

யவுணர் புரத்துக் கசனி யனையான்
கௌணியனார் பாடக் களித்தான்—குவிசடையிற்

கங்கையான் வேதாவின் கங்கையான் பாகமொரு
நங்கையான் முத்து நகையினான்—றங்கியகண்

மூன்றுடையான் காலமொரு மூன்றுடையான் மெய்த்தவமு
மூன்றுடையா னூற்றருணை மூன்றுடையான் — றோன்றுமறை

நாலுடையான் பார்கள்பதி னாலுடையான் காலுதைத்த
காலுடையா னூழில்வருங் காலுடையான் — றோலுரித்த

நாகத்தான் மெய்யணிந்த நாகத்தான் றொண்டான
நாகத்தான் வாழும்வெள்ளி நாகத்தா — னாகத்தின்

கள்ளப் பசிக்குக் கருதுசிறுத் தொண்டனார்
பிள்ளைக் கறிகுகந்த பெற்றியா — னுள்ளத்தி

னீள நினைந்ததிரு நீலகண்டச் சக்கிரிதன்
சூளை நிறைவேற்றத் தோன்றினோன் — மூளைவெட்டு

மிண்டார்க்குந் தாதைகழல் வீழும் படிபுரிந்த
சண்டேச னுக்குமொரு தாய்போல்வான் — சுண்டெலியுந்

தாவி விளக்குத் திரியொளிரத் தானெழுப்ப
மூவுலக முங்கொடுத்த முக்கண்ணன் — ரூவுமரித்

தண்டலையு மாளிகையுஞ் சாளரமுங் கோபுரமுங்
கொண்ட றவிழுங் குளிர்மதிலுங் — கொண்டவளத்

தென்கயிலை யான திருக்கோ ளிலிநாதன்
பொன்கிரியில் வாரிப் பொழிந்ததென — நன்கார்

திருப்பா லபிடேகந் தீங்கரும்பு செந்தேன்
விருப்பா மபிடேக மேவீ — யருட்புரிந்த

கங்கா நதிப்புனலுங் காவேரி நன்னீருங்
கொங்காரு மாழிக் குளிரமுதுஞ் — சங்கினத்தாற்

செய்யு மினிய திருமஞ் சனமாடித்
துய்யசெம்பொற் சோதித் துகிலணிந்து — செய்ய

பவள நிறவெற்பிற் பரந்த நிலாப்போலத்
தவளநிற வெண்ணீறு சாத்திக்—குவலயத்தின்

மந்தரத்தைச் சூழ்ந்திலங்கும் வாசுகி போன்மருங்கிற்
சுந்தரப் பொன்னரைஞாண் சூட்டியே—விந்தகிரித்

தோகை யணிவகுப்புச் சூழ மணிகட்டி
வாகு வலயம் வயங்கவே—நாகரிகத்

தண்டலையின் மீது தயங்கு மதிநிலவைக்
கண்டசர முத்தணியுங் காட்டவே—குண்டலங்கள்

காதில் விளங்குவது காமர் கனகவெற்பி
லாதித் தருங்கபெப்ப தாமென்னச்—சோதிச்

சடையி லணிமகுடந் தங்கக் கொடியின்
விடையுங் கொடிக்கரசா மின்னச்—சுடிகையின்கீழ்ப்

பட்ட மதிக்குப் பரிவேட மிட்டதென
வட்ட வதன மதிவாய்ப்பத்—துட்டருறை

முப்புரத்தை நீறாக்கு மூரி நகையடியா
ரைப்புரக்குஞ் சோதிநில வாய் விளங்கச்—செப்பவினி

யொப்பிலாச் சேட வுரக படாமணியு
முப்புரி நூலு முறைதயங்க—மெய்ப்பா[illegible]

விடநாக கங்கணங்கண் மேவத் தரியந்
தடநாகத் தோலுரியுஞ் சாத்தி—யுடைவாளை

வேங்கைப் புலித்தோல் விசித்த திருவழகும்
பூங்கற் பகவல்லி போல்விளங்கத்—தாங்கியநீட்

சத்திர மாலை தழைப்பத் தழைப்பவில்வ
பத்திர மாலை பலதழைப்பக்—கொத்திலங்கும்

ஸ்ரீ தியாகராஜஸ்வாமியுலா

வஞ்ச விரிஞ்சன் மகுடச் சிரமாலை
நஞ்சு நுகர்களத்தி னாற்றியே—பஞ்சவர்கண்

மூன்னா ளளித்த முழுமணிப்பொன் னாபரணந்
தன்னா லிரவி தயங்கவே—யின்னாட்

டருமபுர ஞான சம்பந்த சாமி
மருமலர்ப் பாதம் வணங்குங்—கருமச்

சிதம்பர நாதமுனி செம்பொனா ரச்செய்
விதம்பரவு மாபரண மின்ன—நிதம்பரவு

மூழிக் கடனா னுலகங் களைத்திரிக்குஞ்
சூழித் திரிசூலத் தொல்படையும்—வாழி

வலக்கையி லேந்து மழுவும் வடவை
யலைக்கு மொருகங்கை யாறுந்—தலைக்கண்ணு

மெம்மா னிடதுகரம் பெற்ற திருமாலு
மம்மா னிடத்துறையு மம்மானின்—கொம்மையிளம்

பச்சை யொளியைப் பசும்புல் லெனக்கறிக்கு
மூச்சிதமுந் தொண்ட ருளங்களிப்ப—வச்சிரமுஞ்

சக்கரமும் வில்லுந் தனிவாளுஞ் சங்குமெனத்
தக்க தசாயுதங்க டான்றரித்துச்—செக்கர்முகின்

மைம்மேகஞ் சூழ்ந்திலங்கும் வண்ணந் திருச்சாந்த
மென்மேல் விளங்க விருந்தொளிர—நன்மைதரும்

வண்டமரும் பூங்குழலாள் வாமபாகத்திருக்க
விண்டநலி விற்கந்த வேளிருப்ப—முண்டகத்தோன்

றுணமைத்த சிங்கா தனத்திற் கொலுவிருந்து
வானகத்து ளோர்பூ மழைபொழியக்—கானவித்தை

## ஸ்ரீ தியாகராஜஸ்வாமியுலா

நாரதனுந் தும்புருவு நாடி யிசைபாடப் 80
பூரிதயாழ் வீணையிசை பொம்மென்ன— வாருதிபோல்

வேதக் குழாம்பயிலும் வேதியருஞ் சூழ்ந்துதொழு
பூத கணங்கள் புடைநெருங்க—மாதருகிற்

சந்திரவி ணோவுந் தமிழோர் சிகாமணியாஞ்
சுந்தரனும் பாடித் துதிசெய்ய—வெந்தைபங்கி

னம்மை முலைப்பாலிற் கம்பவள வாய்திறந்த
சம்பந்த மூர்த்தி தமிழ்ப்பாடக்—கம்மென்னு

மப்பரவைச் சூடுமெங்க ளையன் றிருச்செவியி
லப்பர் திருநா வருந்தமிழைச்—செப்பப்

பெறுமுத்தி பெற்ற பெரியோர்க ளென்னு 85
மறுபத்து மூவருநின் றூர்ப்ப—மறுவகற்று

நந்திப் பிரானு நவில்கட் டியங்கூற
வந்திக்கும் வானோர் மணிமகுட—பந்திகளு

மொன்றோடொன் றாக வுலகம் பதினான்கு
மொன்றோடொன்று மர்யுருட்டி யூடாட—மன்றி

லரமகளி ராடமணி யாலத்தி யேந்தி
வரமகளிர் பாடி மகிழ—விரவுதிருச்

சின்னம் பணிமாறச் சீர்ச்சங்க மார்ப்பரிப்பத்
துன்னும் பலமுரசஞ் சூழ்ந்தொலிப்ப—மன்னுங்

கொடிக்காலி லாடரவ கிண்கிணியு மாடக் 90
கொடிக்கணமர் மால்விடைகூத் தாடத்—தொண்டக்கிசைந்த

செங்கழுநீர் மாலையுடன் செவ்வந்தித் தோடாடக்
கொங்குலவு பீலிக் குடையாட—வெங்குமன்பர்

கொண்டாடி யானந்தக் கூத்தாடக் கண்டுவந்த
தண்டா மரைமயிலுந் தாளுடத்—தண்டி

லசைந்து நடித்துவரு மண்ண றியாகேச
ணிசைந்திருக் கோளிலிவா ழீசன்—கசிந் தூரு

மெய்யன்பர் நெஞ்சத்தின் மேவுந் திருவுருவான்
செய்ய திருவீதி சேர்ந்தளவிற்—றுய்யவராம்

வானவரு மிந்திரனு மாலுந் தவமுனிவோ
ரானவருங் கூடி யணிநெருங்கச்—சேனைகொண்ட

மன்னவரும் வீதி மறையோரும் வேதியருந்
துன்னிவரும் வீதியினிற் சூழ்ந்திலங்கப்—பன்னீருஞ்

சந்தனமுங் கற்பூரச் சாந்துஞ்சவ் வாதுமிரு
கந்தப் பொடிகளப கத்தூரி—யிந்தக்

கலவை யுலகெல்லாங் கமகமெனத் திங்க
ணிலவை யிகலி நிலவப்—பலதாளப்

பண்ணுடனே தேவாரம் பாடுந் திருக்கூட்டங்
கண்ணிமையா வானோர் கணமென்ன—நண்ணுந்

திருஞான சம்பந்தர் சித்தங் களிப்ப
வருஞான சம்பந்த மாலாய்க்—குருபாதஞ்

சிந்தை மறவாச் சிதம்பர நாதமுனி
வந்து சரணமலர்போற்ற—முந்தவரு

மாருமிசை யைங்கரனு மாறுமுக வேலவன்றன்
றோகைமயின் மேலுந் தொடர்ந்தேற—வேகத்தோ

டெண்ணுங் கலுழன்மிசை யேறத் திருமாலு
மன்ன மதன்மே லயனேற—நன்னெறிசே

## ஸ்ரீ தியாகராஜஸ்வாமியுலா

ரிந்திரனும் வெள்ளானை யேறிவர வெண்ணிலாச்
சந்திரன்வி மானந் தனிலேறச்—செந்தழலோன்

மைவா கனமேற மானுழையைக் காற்றேறக்
கைவாய் மறலி கடாவேறப்—பைவாய்

மகரமீ தேற வருண னிருதி
யிகலார் சிவிகையின்மே லேறப்—புகலு

மணிசே ரிவுளி யளகேச னேறப்
பணிசேர் விமானங்கள் வானோர்—கணமேலா

யேற வியக்க ரிசைபாடக் கந்தருவர்
கூறு மிசையாழ் கொடுபோற்ற—வீறிரத்ன

சிங்கா தனத்தியாகர் தென்கோ ளிலித்தியாகர்
சிங்கார மேரு வெனச்சிறந்தே—யங்கணார்

பொன்னாழி பூட்டிப் புவனம் பதினான்கு
மின்னாக ரத்தின் மிளிர்ந்தொளிரப்—பன்னூர்

தியாகக் கொடிசெழிப்பச் செய்ய திருத்தேர்
தியாகப் பெருமான் சிறந்தேறி—நாகரிக

வைகாசி மாதம் வசந்தத் தியாகேச
ரொய்யார மாகவரு மும்பருக்குஞ்—செய்ய

கமலத்து நான்முகற்குங் கண்ணனுக்கு மெட்டா
விமலப் பரஞ்சோதி மேன்மை—யமல

னருமைப் பெருமா னவன்வந்தான் வந்தான்
கருமைக் களப்பரமன் வந்தான்—பெருமையினி

னொப்பிலா மூர்த்தி யொருவன்வந்தான் வாசவன்செய்
கற்பனையில் பூசைக் கடவுள்வந்தான்—மைப்பலநேர்

## ஸ்ரீ தியாகராஜஸ்வாமியுலா

மாயோன் றிருமார்பில் வாழும் பரன்வந்தான்
வேயீன்ற முத்து வெளிவந்தான்—றூயன்

றிருக்கோ ளிலிநாதன் றேவர்பிரான் வந்தான்
மருக்கூ விளந்தரித்தான் வந்தான்—றிருக்கையிலைச்

சுந்தரன் றூதனுந் துய்யபர மன்வந்தா
னந்தரி பங்கி லரன்வந்தா—னிந்தனு

ளென்று திருச்சின்ன மினிய விருந்தூத
மன்றலகத்தின் மாண்பாருந்—துன்றுசெம்பொன்

வானத் தரம்பையரு மண்ணுலக மங்கையரு
மானொத்த நாக மடந்தையருந்—தேனொத்த

விஞ்சையர்கண் மங்கையரும் விண்ணுமண்ணு முன்னிறைந்து
வஞ்சி நிகர்த்த மருங்கசையக்—கஞ்சமலர்ப்

பாதமணி நூபுரமும் பைம்பொன்மணி மேகலையுந்
தாதமரும் பூங்குழன்மேற் றண்ணளியுங்—கீதமுடன்

பாடுந் தொழிலும் பரத விதத்தொழிலுங்
கூடும் படிபாரக் கொங்கைவெற்பை—மூடுதுயி

லுத்தரீ யத்தி லொளிர்வெயிலும் வெண்ணிலவும்
பத்திபா யுந்தொழிலும் பாராட்டிச்—சுத்தவெள்ளைக்

காதள வோடுங் கடைக்கண்ணும் வெண்முருந்திற்
சீதள வாணகையுஞ் செங்கமலப்—போதளவாக்

காட்டிற் பரித்தசிலை கன்னன்மா ரப்பயலை
வாட்டத் துணிந்த மடநல்லார்—நீட்டுகொடி

மாளிகையி லேறி மலர்க்க ணிமையாமற்
சாளர வாசல்வழி சஞ்சரிப்பார்—கோளிலியூர்

வீதி நெருங்க மிடைவார் திருத்தேரிற்
பாதிமதி வேணியனைப் பார்த்தயர்வார்—காதல்கொண்டு

வண்டமரும் பூங்குழலை வாமத் திருப்பவளைக்
கண்டு தொழுது களிகூர்வார்—பண்டாரனார்

தோடரவச் செஞ்சடையுஞ் சோதி மதிமுகமு
மாடரவக் கிண்கிணிக்கா லம்புயமுங்—கேடில்மத

வேளனைய ரூப மிளிரொளியுங் கண்டுகொண்டு
வாளனைய கண்ணார் மயங்குவார்—கோளிலிக்கு

நாயகனை வானவர்க்கு நாயகனை வாழ்தியாக
நாயகனை நான்முகற்கு நாயகனைத்—தேவரத்ன

சிங்கா சனனைத் திருவனையார் கண்டவரா
யங்கான மையலி லாழ்ந்திட்டுச்—சங்கரனார்

மானிருந்த கையன்மேன் மாலாகிச் சில்லோர்க
டேனிருந்த வண்டெனவே தேடிமொய்ப்பார்—கூனிருந்த

செய்யமதிச் செஞ்சடையான் செம்பொ னிகர்வடிவை
மையணிந்த கண்ணான் மகிழ்ந்துண்டு—துய்யவளா

முத்திலங்கு வெண்ணகைக்கு மோகித்துப் பாரகத்திற்
சித்திரம்போ னின்று திகைத்திடுவா—ரித்தலத்திற்

பூச்சொரிந்த கொம்பெனவே பூணு மணிசோர்ந்து
மூச்செறிந்து கைகூப்பி முன்னிற்பார்—கூச்சமின்றிப்

பன்னக பூடணனைப் பார்ப்பார் பழிகாமச்
சன்னத மாடித் தயங்குவா—ரன்னவரிற்

ஸ்ரீ தியாகராஜஸ்வாமியுலா

## (குழாங்கண் முற்றும்)

## (பேதை)

பூவாத மாதவிபூங் கொம்பி னிலிருந்து
கூவாத பெட்டைக் குயிற்பிள்ளை—யாவலுடன்

கீர்த்தி மொழிச் சொல்வாய்க் கிளிப்பிள்ளை கெண்டையொத்துக்
கூர்த்தடங்கண் கள்ளமில்லாக் கொம்பனையாள்—பார்த்தவர்க

ணெஞ்சை யுருக்கிவிடு நீண்மதலை வாக்குடையாள்
பஞ்சை நிகரும் பதமுடையாள்—மஞ்சுளமார்

செந்தே னிளநிலாச் சேரு மதிக்குழவி
யந்தே னலம்பா வரவிந்த—மந்தமுறக்

கூட்டி முடிப்பதற்குக் கூடாத கொண்டையாள்
பூட்டுங் குழைக்குதம்பைப் பூணினாள்—சூட்டுபணிப்

பொற்றொடியார்க் கன்புசெய்யாப் புன்மாந்தர் சென்மம்போ
விற்று முளைக்கு மெயிற்றினா—ளூற்றமணி

கண்டம் புனையுங் கரியமா ணிக்கமணி
கொண்ட திருவனைய கோலத்தாண்—முண்டகம்போற்

கூறு முகத்தினாள் கோதில்வா யாம்பலினின்
றூறு மதலை யுரையினாள்—கூறியசொல்

பூவைக்குங் கிள்ளைக்கும் பொன்னா லிழைத்தமரப்
பாவைக்குந் தாலாட்டும் பண்பினா—ளாவலுடன்

றங்கவளை யுஞ்சரியுஞ் சாற்றுஞ் சிறுபவளக்
சங்கணமுங் கட்டிவைத்த கையினாள்—செங்கனகச்

சிற்றாடை சுற்றுஞ் சிறுகிடையாள் சிற்றடியிற்
பொற்பார் சிறுசதங்கைப் பூணினாள்—சிற்றாயஞ்

சூழச் சிறுபானைத் துய்யமணற் சோறுக்கு
மேழைப் பருவத் திளம்பேதை—வாழியா

யன்னையர்தம் மொக்கலைமே லாக்கியிதழ் முத்தாரப்
பொன்னணையும் வீதி புறப்பட்டாள்—பன்னுமறை

தேடும் பரமத் தியாகேசன் றன்னை யசைந்
தாடுந் திருத்தா ளழகனையே—கூடுமறை

நாலுக்கு மெட்டாத நம்பரனைச் சம்பரனைச்
மாலுக்குங் காணரிய மன்னவனை—நாடிப்

பணிவார் பணியப் பணிந்தா டிருநீ
றணிவா றணிய வணிந்தாண்—மணிசேர்

கனகத் திருத்தேரைக் கண்டிமையா நின்றா
ளனகர் கரத்தே யணியுந்—தனதான

மானை விளையாட வாவென்றாள் செய்யசடைக்
கானமதி யம்புலியைக் காட்டினா—டானரன்பால்

வண்டார் குழலாளை வானுலக மீன்றாளைக்
கண்டா ளிருகண் களிக்கின்றா—ளொண்டொடிபான்

மெய்ப்பா யிருந்து விளையாடச் செல்வனென
வெய்ப்பா யழும்பேதைக் கேந்திழையார்—தப்பாமற்

றேமிருக்குங் கொன்றைத் தியாகர் மனையாள்போல்
யாமிருக்க வேண்ட லெளிதாமோ—வாமகளே

யென்று செவிலி யிருகையி னாலணைத்துக்
குன்றுநிகர் மாளிகையிற் கொண்டகன்றாண்—மன்றில்வரும்

(பேதைமுற்றும்)

(பெதும்பை)

பெண்ணா ரமுதப் பெதும்பை யொருத்தி மலர்க்
கண்ணாலே மானழகைக் கைக்கொண்டாள்—பண்ணார்

கிளிக்கு மழலை மொழிகொடுத்துச் சீர்த்தி
யளிக்குங் கிளிமொழிய ளானா—ளொளிக்கு

மயிலிடத்துச் சாயலையும் வாங்கினாள் செய்ய
கயிலிடத்துக் காந்தள் வரக் கற்றா—ளொயிலிடமா

மன்ன நடைபோல வழகுநடை யாதரித்தாண்
மின்னி னிடையிடையும் வேண்டினாள்—பொன்னின்

கொடியிடத்து மேனிக் குணங்கற்றாண் மெல்லக்
கடிதடத்தாற் றேரழகு கற்றாள்—வடிவுகொண்ட

செந்தா மரைபோற் றிருமுகத்தாள் சீதநிறைக்
கொந்தாரு நாசிக் குமிழினாள்—சிந்தூரஞ்சேர்

வாலைச் சிறுநுதலாள் வண்மைபெற்ற பொன்னோலைக்
கோல மருவுங் குழைக்காதா—ணீலமணிப்

பொன்னித் திலமாலை பூண்டு வடிவொழுகுங்
கன்னிக் கமுகனைய கண்டத்தாள்— பன்னணிசேர்

முத்தணிந்த வேய்போல் மொழியுமிரு தோளினாள்
சித்திரம்போ னின்றாடுஞ் செவ்வியாள்—பத்திரமாய்த்

தென்னஞ் சிறுகுரும்பைச் சீர்போற் சிறந்திருக்குஞ்
சின்னஞ் சிறியமுலைச் சேயிழையா—ளிந்நிலத்திற்

கண்ணுக் கழகாகக் காட்டுங் கலன்பூண்டு
பெண்ணுக் கழகாம் பெதும்பைமா—னன்னுதலார்

சூழச் செவிலி தொடர்ந்து பரிவாக
வாழ்க் கழங்காட வந்திருந்தா—ளேழையிவ

ளேந்துங் கழங்கை யெறியவிழி யுள்ளவொளி
பாய்ந்தருகு நீலம் பரந்ததாற்—காந்திகொண்ட

செவ்வா யளவுவரச் செப்புஞ் சிறுநகையாண்
மெய்வாய்க் கழங்கும் வெளுத்ததாற்—கைவாவி

யம்பொற் கரத்தி லணியும் பெழுதிலந்தச்
செம்பொற் கழங்குஞ் சிவந்ததா—னம்பன்

கைலைமலை யிந்துநதி காவேரி நாடு
மியலாந் திருக்கோ ளிலியூ—ரொயிலான

செங்கழுநீர் மாலை சிறந்தசுரு திப்புரவி
யங்கவ் வயிரா வணக்களிறுந்—துங்க

விடைக்கொடியுந் த்யாக விருதவுணர் தம்மை
முடுக்கு முழவ முரசு—மடுக்கும்

பலகோடி யண்டம் பரவுசெங்கோன் மற்றும்
பலவாய்க் கழங்காடிப் பாடி—யுலவக்

குமுறுதிருத் தேரொலியுங் கொண்முரசுங் கேளா
ஞிமிறமரும் பூங்குழலா ணேர்போ—யமலனையே

கும்பிட்டாண் மெய்விரகங் கொள்வதுங் கொள்ளர்தனுமாய்
கம்பு திருமடந்தை நண்ணினாள்—கும்பமெனக்

கொங்கை யுடையாள் கொடுமை விழிக்கடையாள்
சங்கை யிடையுந் தளர்வில்லா—ணங்கைநிற்ப

கண்ட மதனன் கடுங்கணையைப் பார்த்திவளைச்
சண்டைசெய்யா தப்புறம்போய்த் தானின்றா—ணொண்டொடியா

(பெதும்பைமுற்றும்)

(மங்கை)

னின்ன மொருத்தி யிரதி மதராசன் 185
றன்னை வருத்துந் தகைமையாள்—கன்னன்

மதுர மொழியு மதிமுகமுங் காதி
லெதிரும் விழிக்கடையு மின்ன—முதிராக்

களப முலையுங் கழைபோற் றிரண்ட
புளகப் பணைத்தோளின் பொற்பு—மளகக்

கருமுகிலுந் தொண்டைக் கனிவா யிதழுந்
திருமகளை யொத்த சிறப்புங்—குருகிருந்த

காந்தளங் கையுங் கலகலெ னுங்கலையும்
பூந்தடவேய்த் தோளும் புடைமுலையாற்—றேய்ந்த

சிறுமருங்குன் மின்னுஞ் சிவந்த மலர்த்தாளு 190
முறுகுமுறு நூபுரமு மோர்ந்து—மறுகத்

தவஞ்செய்யு மாமுனிவோர் தங்கள் குணமெல்லா
மவஞ்செய்ய நிற்கு மழகு—நவஞ்சிறந்த

சித்ரமுயிர் பெற்றநடை கற்றவிர கத்தில்வரு
சித்தசனை வெற்றிகொளு மூத்துநகை—வித்துரும

மொத்தவிதழ் மத்தகச மொத்ததன முத்தமிழ்வ
டித்தசுவை யொத்துமது ரித்தமொழி—யுத்தமிகு

வந்ததிலோத் தமைபோல் வானு டரம்பையைப்போல்
வந்த சரச மடமங்கை—சந்திரநதி

மூத்திறைக்கும் வாரி முளரிமலர் வண்டினங்க 195
ளொத்தெழுந் தாங்க ணுறைவெயில்காய்—நத்ததனை

யுந்தி வெருட்டும்வய லூர்க்கோ ளிலிநாதன்
வந்தனன் றேற்றி வந்தானென்—றந்தமிலா

மாதர் நெருங்கி வருவீ தியினடக்து
தீதிலாத் த்யாகனையே தெண்டனிட்டாள்—காதலா

யேந்திழையு நின்று ளிருகை வளைசோர்ந்து
சோர்ந்து மணி மேகலையுஞ் சோர்ந்தயர்ந்தாள்—காந்தனே

மங்கைப் பருவமிந்த வாலிபம்போனால்வருமோ
கங்கைச் சடையாய் கலந்தணைவாய்—மங்கையொரு

பாகத்தா னென்னையுமன் 'பாகத்தான் மேவாமன்
மோகத்தான் வாட்ட முனிவேது—நாகரிகச்

செந்தே னிதழியாய் செந்தே னிதழியான்
வந்தே னிதழ்த்தேன் வழங்கிலாய்—சுந்தரற்கா

வேசிப் பரவைதிரு வீட்டுக்குத் தூதுசென்ற
வாசை கொடிதென் றறியாயோ—நேசமலை

மின்னைத் தழுவி விளங்குமொரு பங்களித்தா
யென்னைத் தழுவீலுனக் கீனமோ—முன்னமொரு

மாலான மோகினிக்கு மாலானா யானுமுன்மேன்
மாலானேன் மாலைதர வல்லையோ—மேலானே

யென்று மடந்தை யிவைபுகலத் த்யாகனிவ
னென்றுரைத்தா ளென்று நகைவிளைத்துச்—சென்றதடந்

தோகல வந்த திருந்திழைமேற் போர்மாரன்
வீரமலர் வாளி விடுத்தயரக்—காரிகையை

மாதர் கொடுபோய் மலரணைமேற் சேர்த்தினார்
காதலுவரிக் கரைகாணா—ளாதரத்தோ

(மங்கைமுற்றும்)

(மடந்தை)

டின்ன மொருத்தி யெதிர்மாரன் றெண்டனிட
மன்னு கமல மலர்ப்பதத்தா—என்னத்தை

யொத்த நடையா ளுமைசிறுவ னைத்தன்மேல்
வைத்த மயிலனைகர் மாண்புடையாள்—சித்திரமாய்

நீலமணிந்தா ணிதிசேர் மலையளித்த
கோலமக டன்னையொத்த கோலத்தாள்—வாலதிரன்

கொங்கைத் திருமடந்தைக் கோல மெனத்தயங்கு
மங்கைக் குயர்ந்த மடந்தைமான்—செங்கையிலுற்

பந்தடிக்கின்ற படபடப்போ டாண்மருட்டுஞ்
சந்தடி கொண்ட தனங்குலுங்கக்—கொந்தளகப்

பாரஞ் சரியமுகப் பங்கே ருகம்வியர்ப்பச்
சோரு மருங்கு றுவண்டசைய—நேரிழையு

நின்ற திருவீதி நோக நீள்சடைமேற்
கொன்றை புனைந்ததிருக் கோளிலியான்—வென்றிபெறு

மாழித் திருத்தே ரனகனரு மைப்பெருமாள்
வாழித் திருத்தாள் வணங்கினு—ளேழையிவள்

பெண்மதியு மென்ன பிழையோ திருமால்போற்
கண்மலரைச் சாத்திக் கசிந்தாலுந்—தண்மலர்க்கை

யாழி யிழந்தா ளணிவளையுந் தானிழந்தாள்
சூழியமும் பொற்பணியுந் தோற்கின்றாள்—வேழமதன்

கையிற் கணைபொழிந்த காயத்துக் காற்றிலாண்
மையற் பிணிக்கு மருந்தறியா—டொய்யின்

முலைகடனைக் கண்ணிநீர் முத்தருவி கொள்ள
வலைகொள்ளநின்று ளவளோ—விலைகொள்ளு

மாதரைப்போல் வெட்க மறந்தா ளெனத்தழுவிக்
கோதையரு மாளிகையிற் கொண்டகன்றார்—மாதொருத்தி

## (மடந்தைமூற்றும்)

## (அரிவை)

யாலைக் கரும்புமொழி யாளரிவை யம்புயஞ்சூழ்
சோலைக்குள் மாமயிலாய்த் தோன்றினாள்—ணீலத்தின்

காராருஞ் சோலையுந்தன் கார்குழலென் றெண்ணினாள்
வாராருங் கிஞ்சுகஞ்செவ் வாயென்று—நேராகக்

குந்த நகையைக் குளிர்வெண் ணிலாவென்றுஞ்
சந்தநிறை முல்லைமலர்த் தந்தமென்றுங்—கொந்திலவு

செண்பகப் பூவைச் சிறந்ததிரு நாசியென்றுங்
கண்பரவு வேலைவிழி காணென்றுந்—தண்பரவு

கொங்கைமுகங் கண்டுபெருங் கோங்கைநிக ராமென்றுஞ்
தூங்கமலர்த் தேனையின்பச் சொல்லென்றும்—பங்குபெறு

காந்தண் மலரைமலர்க் கையென்று மாங்கிருக்கு
மாந்தளிரை மேனி வடிவென்றுஞ்—சேர்ந்த

தளிரா விலையைவயி றென்றுந் தழைந்த
துளிரா மிளம்வேய்தோ ளென்று—மொளிரு

மரசிலையை யல்குலென்று மாங்கு நிறைவாழை
யுரைசெறிந்த வூருவென்று மேவி—யுரையுங்

கிளிக்கு விளம்பிக் கிளரு மெகினத்தை
யளிக்கு நடையென் றளித்துத்—தெளிக்கு

மலர்ச்சோலை விட்டு மடந்தையர் பாற்கூடிக்
கலைச்சீர் மனையணைந்த காலை—யலைசேர்

திருப்பாற் கடலிற் றிருமா லகத்தில்
விருப்பா யெழுந்தருளும் வென்றி—யுருப்பா

யொளிசேர் தியாகேச ரூரு மிரதங்
களிசேர் திருவீதிக் கண்ணே—வெளிசேர்தல்

கேட்டாள் புறம்போந்தாள் கேடியமற் கன்றூக்குந்
தாட்டா மரைதன் றலைசோத்தா—ணாட்டத்து

நோக்கினா ளாரு நுவல வரும்வனப்புட்
டேக்கினாள் கைகள் சிரங்குவித்தாள்—வாக்கினா

லையமே நீர் மதனை யன்றனங்க னாக்கியவன்
செய்யுந் தொழிலைத் திருவருளாற்—செய்திடுவா

னுன்னியவன் கோலத்தி னோடும் புறப்பட்டீர்
கன்னியர்கள் காமுகர்க ளாகவோ—சென்னிமிசை

யிப்பிறையேன் வைத்தீ ரிராக்காலத் தேயுதிக்கு
மப்பிறை யொன்றே யமையாதோ—முப்புரமும்

புன்முறுவ லான்முன் யொடியாக் கியகதையை
யின்னிலத்தார் நம்பா ரெனநினைத்துச்—சன்மமுறுங்

கன்னியரா மெம்மைநிலங் காணக் கருக்கவோ
வன்னதுடன் வீதி யணைந்திட்டீர்—மின்னு

மதுரையி லின்னும் வளையல்விற்க வோவெம்
மதிரும் வளையல்கொள்வீ ரையா—சதுராக

வோர்பெண்ணைப் பாகம்வைத்தீ ரிவ்வுலகங் காக்கமற்றை
யோர்பெண்ணைச் சென்னிவைத்தீ ரோர்நாண்மற்—றோர்பெண்

புலவியக லத்தூது போனீர் மறுகி
லுலவுமுலாக் காணவந்திட் டோமின்—நலநுகரா

தெம்மை மதனலிய வேவிதே லூர்தமக்குச்
செம்மையோ வெல்லாந் தெரிவிரெனக்— கொம்மை

முலையா ளரிவை மொழிந்தா ளுயிர்த்தா
டலையால் வணங்கினா டான்மேற்—கலைமுதல

வெல்லா நழுவ விருந்தாளை யின்கரும்பின்
சொல்லார் பலர்வீட்டுத் தூக்கினா—ணல்லா

## (அரிவைமுற்றும்)
## (தெரிவை)

ளரிவையின்பா டிவ்வாறே யாக வொருவல்லி
பரிவையரன் பால்வைத்த பண்பா—டெரிவையலர்

கட்டி முடித்தகுழற் காராள் கவின்பெருகு
வட்டமித் திங்க ளனநுதலாள்—பொட்டதனில்

வைத்ததினா லேயந்த மாதவர்தம் வாழ்க்கையெல்லாம்
பொய்த்ததென வையம் புகல்வனப்பாள்—செய்ப்பிறழுஞ்

சேலே யெனவுந் திருக்குமரன் கையில்வைத்த
வேலே யெனவும் விரிவிழியா—ளாலைக்

கரும்புந் தமிழ்மொழியைக் கற்றோர் திருவா
யரும்புங் கவியு மனசொல்லாள்—விரும்பு

முகமதியி னூடிருந்து மூடா தலர்ந்த
நிகரிலா வாம்பலே நேராப்—பகர்வாயாள்

பாஞ்சசன்னி யம்பயந்து பாற்கடலின் மாலுடனே
நீஞ்ச வெருட்டு நிறக்கழுத்தா—ளோஞ்சிலா

வின்னீர் நிறைந்த விளநீ ரிணைந்தென்னப்
பன்னீர்மைத் தாயு பருமுலையா—ளன்ன

பருத்துப் பருத்துப் பருவரலே செய்ய
வருத்தம் பொருக்காமல் வரடித்—தரித்திரமாய்ப்

பேர்ந்த புலவோர்க்குப் பொருளிம்மி யேனுந்தொட்
டீந்திடார் செல்வ மெனக்குறைந்து—தேய்ந்தவிடைக்

கன்னிகை பட்டுக் கலைமே கலையாத்துப்
பன்னிய சேமம் படவைத்துந்—துன்னியசீர்க்

கோக்குமர ராவி யெனுந்தவளை கூட்டுண்ணப்
பார்க்குமரப் போலுநிதம் பத்தாள்சீர்—தேக்குமெழிற்

பொன்னனையாள் கோளிலிசூழ் பொன்னி நதிப்படுகை
துன்னு கதலியெனச் சொல்லுறுங்கா—டுன்னுகணைக்

காலென் சுறவாள் கரண்டகமென் னும்பறழாள்
வாலிய பஞ்சினுக்கு வன்னமிட்டு—நூலுணர்ந்தோர்

செம்பஞ் செனச்செப்பச் செய்யவடி யாள்மயிலை
வம்பெண்ணை வாட்டுமொரு மாதுமற்று—கும்பர்வரக்

கண்டாண் மதிமயங்கிக் காமுகியாய்ப் பொன்பூப்பக்
கொண்ட லனைய குழல்சரியத்—தெண்டனிட்டுப்

பாடியிலாய் மாதர் பலரைப் புணர்ந்தவன்பா
னீடிய பாற்கடலி னின்றுள்ளீர்—கூடிக்

குரவன்மனை யைப்புணர்ந்த கூற்று மதிசூடி
யிரவு விடிந்ததென வேக—வரமுனிவன்

போல்வேடம் பூண்டவன்றன் பொற்றொடியா ளைப்புணர்ந்த
சீலமிலி பானெனுநாட் சேர்ந்தீர்முற்—காலத்தின்

மாதவர் மாதர் மதிமயங்கக் கோலந்தொண்
டேத மிழைத்தீ ரிதனாலே—கோதில்

பழக்க மியற்கையிரு பண்பா னுமக்கு
வழக்க மிதுதானோ வள்ளா—விழுக்கெமக்கு

நீரே யிழைத்து நிறைகொண் டேகினால்
யாரிடத்துக் கூறுவோ மையாவிப்—பாரிடத்தின்

மற்றொருக் கொன்றுவழியுமக்கு மற்றொன்றூப்
பெற்றதென் னென்றுரைத்துப் பேருதிரென்—றற்றமுடன்

பேசினாள் வீழ்ந்தாள் பெருமூச்சு விட்டுமனங்
கூசினா டன்னையவள் கூடவுள்ள—மாசிலாச்

சீரிழையா ரெல்லாருஞ் சேர்ந்தெடுத்துக் கைப்பற்றாய்ச்
சூரியனை யெட்டும்வீட் டுச்செல்லப்—பேரிளம்பெண்

## (தெரிவைமுற்றும்)
## (பேரிளம்பெண்)

வாருதியெல் லாம்பருகி மாமழையா கப்பொழிந்த
காரனைய வோதியினைக் கைப்பற்றி—நேரிழையாள்

பின்னாது நேர்மை பெறமுடித்த கூந்தலா
ளின்னா வெவர்க்கு மிழைக்காமன்—மன்னுகண்ணன்

போரணைச் சந்திரனே போன்றமுகத் தாள்பட்டு
வாரினாற் கட்ட வரமாட்டோம்—யாரோ

வடக்குவா ரெம்மையென வாங்கா ரங் கொண்ட
குடத்தை நிகருமுலைக் கொம்பு—படத்தினையே

முன்ன நிகர்த் திப்பொழுது மூதறிஞர் தேர்த்தட்டுத்
தன்னை நிகருமெனச் சாற்றுமல்கு—லின்னெழிலா

டாமாக வந்து சலிக்கா தணைந்தார்க்குக்
காமரச மீயுங் கரும்பூன்றி—யேமமுடன்

0714M,T
N12



## ஸ்ரீதியாகராஜஸ்வாமியுலா

85600

பார்ப்பாரே யன்றிப் பலருந் திளைக்கரிய
சீர்ப்பாவைப் பெண்ணரசு தேரேறி—யார்ப்பரித்துத்

த்யாகேசர் வீதிவந்த செய்தியினைக் கேட்டந்த
மாகேசர்க் காண மகிழ்ந்தணைந்து—வாகான

சங்காழி வீழ்த்தித் தரித்த கலைதோற்றுப்
பொங்காழி யென்னப் பொழிந்துகண்ணீர்—பங்கேரு

கத்தை நிகர்த்த முகத்தை வெயர்த்துளி
பொத்த வுயிர்த்து வடிக்கணை—சித்தசன்மே

லோயாதே யுய்ப்பத்த ளேறிக் கணிந்தமலர்
தீய்வாய்ப்பெய் தென்னவெந்து தீந்துதிரத்—தாவா

முலைக்கணிந்த சாந்த மொகுமொகென வேவ
வலைப்புண்ணே வாய்திறந்தெ மையா—மலைப்பாகத்

த்யாகேச ரென்னத் திருப்பேர் தரித்திட்டீர்
வாகாகத் தம்மிடத்து வந்தோர்க—ளோகையுடன்

கேட்ட பொருளெல்லாங் கிடையா தெனுதீவார்
நாட்ட முறாதுமென நாங்களெல்லாங்—கூட்டமாய்

வந்தடைந்தோ மெவ்வை வகித்தவளை யாழியரைத்
தந்தகலை மற்றுமெமைச் சார்ந்தவெலாஞ்—சொந்தமா

யெம்மைக்கே ளாதேயெ மெண்ணக்கு மாறாக
வெம்மை மயற் றீயிலெமை வீழ்வித்துச்—சும்மாகைக்

கொண்டீர் சிறிதேனுங் கோதிலா நீருமக்குப்
பெண்டி ரெனப்பே யிரங்குமென—விண்டமொழி

பொய்யாயிற் றேபுகலீர் சீர்பூத நாதரென்
வைய மொழியுமந்த மாற்றத்திற்—செய்ய

நிலைமொழியெந் தம்மையெலா நீக்க வீதிதா
னலையுலகி லெவ்விலக்க ணத்தோ—கலைமொழிந்தீர்

சொல்லீ ரெனவந்தத் தோகைபகர்ந் தாண்மெலிந்தா 290
ளெல்லாரு மாத ரெடுத்தவளை—வல்லைத்த

மில்லம் புகுந்தா ரிவ்வேழு பருவத்து
நல்லாரு நாண முதலவிட்டுச்—செல்லுமா

முப்புரமும் வீட்ட முனிந்தநா ணண்மறையா
மப்புரவி பூட்டு மருந்தேரை—யொப்பாகுந்

தேரின்மீ தேறித் திருவீதி நான்குஞ்சூழ்ந்
தார்முழுது மூர்ந்தா னுலா 293

(பேரிளம்பெண் முற்றிற்று)

ஸ்ரீதியாகராஜஸ்வாமியுலா முற்றுப்பெற்றது.

85600

பாரதிப் பிரஸ், மன்னார்குடி—ெ. 330—1-7-12—1000.